ஆண்டு பட்டிகை வழக்கு எண்.67/2026

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

C.C.No. 67/2026 LW– 1 PW– 1

Name : அழகுராஜ் ( புகார்தாரர்)

Father's/Husband's Name : பழனியாண்டி

Village : நத்தம் காவல் நிலையம்

Taluk : நத்தம்

District : திண்டுக்கல்

Age : 37/2026

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22nd day of June 2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் தற்போது நத்தம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.03.2026ம் தேதி 10.00 மணிக்கு நானும், என்னுடன் பணிபுரிந்த தலைமைக் காவலர் 2259 திரு. கண்ணன் என்பவரும் சார்பு ஆய்வாளரின் உத்தரவின்பேரில் நத்தம் பகுதியில் போதைப் பொருள் தடுப்பு சம்பந்தமாக ரோந்து செய்து கொண்டிருந்தபோது, நல்லூரிலுள்ள எதிரி பழனிச்சாமி என்பவரின் வீட்டின் அருகில் எவ்வித அரசு அனுமதியும் இல்லாமல் மதுபானங்களை சில்லறை விற்பனை செய்வதாக எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில் சம்பவ இடத்திற்கு சென்று நாங்கள் பார்த்தபோது எங்களை பார்த்ததும் ஓட எத்தனித்தவரை பிடித்து விசாரிக்க அவர் பெயர் பழனிச்சாமி, வயது 48, த/பெ.சின்னையா, நல்லூர், கோட்டையூர் என்று கூறினார். மேலும் அவர் வைத்திருந்த வெள்ளைநிற பிளாஸ்டிக் சாக்குப்பையை பிரித்து பார்த்தபோது அதில் 180 ML அளவு கொண்ட XXX ரம் 26 மதுபாட்டில்கள்

இருந்தது. அதை பற்றி அவரிடம் விசாரித்தபோது, அவர் எவ்வித அரசு அனுமதியில்லாமல் சில்லறை விற்பனை செய்ய வைத்திருப்பதாக கூறினார். மேலும், எனவே அவரிடம் காரணம் கூறி அவரை 11.00 மணிக்கு வழக்கு சொத்துக்களுடன் காவல் நிலையம் கொண்டு சென்று அவர்மீது நடவடிக்கை எடுக்கவேண்டி சார்பு ஆய்வாளரிடம் தனிஅறிக்கை கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் தனி அறிக்கையும், அதிலுள்ள கையொப்பமும் என்னுடையது தான். (**அந்த தனி அறிக்கை அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் எதிரி ஆஜர் செய்த வழக்கு சொத்துக்களான 180 ML அளவு கொண்ட XXX ரம் 26 மதுபாட்டில்களை நானும், தலைமைக் காவலர் திரு. கண்ணனும் சாட்சியாக இருக்க எங்கள் முன்னிலையில் சார்பு ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் நானும், திரு. கண்ணன் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. (**அத்தாட்சியில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

3) இவ்வழக்கில் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக இல்லை என்றால் சரிதான். நான் கைப்பற்றியதாக சொல்லப்படும் வழக்கு சொத்திற்கும், எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. தனிநபர் சாட்சி யாரும் இவ்வழக்கில் விசாரிக்கப்படவில்லை என்றால் சரிதான். ரோந்து பணிக்கு சென்றது தொடர்பாக பொது நாட்குறிப்பில் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி பதிவு செய்யப்பட்ட பொது நாட்குறிப்பை சார்பு ஆய்வாளர் விசாரணையில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் வழக்கு சொத்துக்களை எதிரி எங்கிருந்து வாங்கினார், எவ்வளவு தொகைக்கு வாங்கினார் போன்ற விபரங்கள் வழக்கில் சொல்லப்படவில்லை

**என்றால் சரிதான். யாருக்கு விற்பனை செய்ய வைத்திருந்தார், எவ்வளவு தொகைக்கு, எவ்வளவு லாபத்திற்கு விற்பனை செய்ய வைத்திருந்தார் என்ற விபரமும் வழக்கில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். புள்ளிவிபர கணக்கிற்காக எதிரி மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.**

**மறுவிசாரணை :** இல்லை.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்